உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீவிடோபா சுவாமிகள் சரித்திரம்.

இது
வித்வான் போளூர்
ஆ. தா. அரங்கசாமி நாயகரவர்களால்
இயற்றப்பட்டு

ஆரணி
ஸ்ரீ திருநாவுக்கரசு அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

ருத்ரோத்காரிஸு வைகாசிமீ

1923.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீவிடோபா சுவாமிகள் சரித்திரம்.

இது
வித்வான் போளூர்
ஆ. தா. அரங்கசாமி நாயகரவர்களால்
இயற்றப்பட்டு.

ஆரணி
ஸ்ரீ திருநாவுக்கரசு அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

ருத்ரோத்காரிஸு வைகாசியீ

1923.

பிழை திருத்தம்.

க்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
வுரை	1	அநுக்கிகரத்	அநுக்கிரகத்
டி	13	வழிலே	வழியிலே
டி	17	சரிதிதிரம்	சரித்திரம்
2	11	அவையடக்ம்	அவையடக்கம்
3	22	சாற்றகு	சாற்றரு
4	9	பினனர்த்	பின்னர்த்
5	2	மெயந்நடுங்கத்	மெய்ந்நடுங்கத்
7	15	யெவவுலகத்து	யெவ்வுலகத்து.

சாத்து கவிகள்.

சென்னை வேதாந்த தர்க்க போதகாசிரியர்

ஸ்ரீமத் கோ. வடிவேலு செட்டியாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

வித்துவானுப விட்டோபாவினற்சரிதம்
பத்தியொடு பன்னயங்கள் பான்மையவா—வொத்திலங்க
போளூர ரங்கசாமிப்புலவன் பொய்யகலக்
கேளாகச் சொற்றான் கிளர்ந்து.

போளூர் போர்டு மிடில்ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் தஞ்சை

ஸ்ரீமான் வி- சாமிநாத பிள்ளையவர்களியற்றிய

அறுசீராசிரிய விருத்தம்.

விண்ணுலகுந் தொழுமண்ணா மலைவடபாற் போளூரில்
விளங்கு ஞான
புண்ணியனார் விட்டோபாவெனும் பெரியார்மெய்ச் சரிதம்
புகன்று பாவாற்
பண்ணவர்க்கு மடைவரிதாம் புண்ணியநற் பெரும்பேறு
படைத்திட் டானங்
கண்ணனைய தமிழ்ப்புலவ னரங்கசாமிப் பெயர்கொள்
கவிஞ னம்மா.

உ

சிவமயம்.

முகவுரை.

வேதாந்த நெறியொழுகி அருட்குருவின் அநுக்கிரகத்தால் அறிவையே அறிவது பயனென்பதோர்ந்து தன்னையறிந்து தானறிவானந்த வடிவமாக விளங்கிய சீவன்முத்திப்புருடர்கள் நம்பாரத கண்டத்தில் எண்ணிறந்தவர்களாயிருந்தனர் என்பது மிக்கப் பிரசித்தம் அங்ஙனமிருந்தவர்களுள் திருவண்ணாமலைக்கு வடபாகத்துள்ள போளூரின்கண் அருள் விளையாடற்செய்து கொண்டிருந்து சென்ற சாதாரண வருடம் ஐப்பசி மாதம் எட்டாந்தேதி புதவாரம் திருவாதிரை நட்சத்திரங் கூடிய சுபதினத்தில் விதேக முத்தியடைந்த ஸ்ரீ விடோபா சுவாமிகளும் ஒருவராவர் அவரது சரித்திரம் இலை மறைகாய்போலிருத்தலின் யாவர்க்குஞ் சுலபமாகத் தெரிவது அருமையாயிருப்பது நோக்கி அதனைப்பார்த்தவளவிலே கேட்ட வழிலே பழகிய முறையிலே சுருங்கச் சொல்லலும் விளங்கவைத்தலுமாக படிப்போர்க்கு மனனமாம்படி செய்யுள் வடிவத்திலே எழுதிமுடித்து வசனமும் எழுதி அதற்கு "விடோபா சுவாமிகள் சரித்திரம்" என்று பெயரிட்டு அதனை அச்சிட்டு வெளியிடலானேன் இதனை யான் இயற்றுதற்குக் காரணம் பரம ஞானிகள் சரித்திரத்தைப் பாராயணம் செய்பவர்க்குப் பாவமனைத்தும் பறந்தேகும் என்னும் சாஸ்திர வசனத்தின் மீதுள்ள நம்பிக்கையேயாம் இதிற்பிழையுளதாயின் உலகம்பொறுக்க.

—6—23.
போளூர்,

இங்ஙனம்,
அன்பன்,

ஆ. தா. அரங்கசாமி நாயகன்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீவிடோபா சுவாமிகள் சரித்திரம்.

புணர்ந்த பாவமேலாம் பரிபூரண
முணர்ந்த ஞானி விழ்பட வோடுமே.

பன்னருஞ் சிறப்புவாய்ந்த சென்னை மாநகரின்கண் க்ஷத்திரியகுலத்தில் உதித்தவரும் இற்றைக்குச் சுமார் அறுபது வருடங்களுக்கு முன்னிருந்தவரும் புசிபாயென்னு மனைவியோடில்லறத்தினை நடாத்தியவருமாகிய பதரே நாகோசிராவ் என்பவருக்கு ஆண்டவன் திருவருளாலோ ரருமைப்புதல்வர் தோன்றினர் இவர் தோதாராவ் எனப் பிள்ளைத்திருநாமஞ் சூட்டப்பெற்று வளர்ந்துவருவாராயினர் இங்ஙனம் வளர்ந்துவருங்கால் இவர் மிகச்சிறுவயதாயிருக்குங்காலத்திலேயே இவரது தாய் விண்ணுலகைபடைந்தனர் பிறகு தந்தை வளர்த்துவருவாராயினர்.

அங்ஙனமிருக்கு நாளில் இவர் முன்னர்த் தாய்தந்தையரால் பயிற்றுவிக்கப்பெற்ற கல்வியுடன் தம்முயற்சியால் கலைபலவு முணர்வாராயினர். முற்சென்மாந்தரத்திற் செய்த தவவிசேடத்தால் இறைவனொருவனுண்டெனத் தெளிந்து அவ்விறைவனையே நாடோறுந் தியானித்தும் வந்தனர். அத்தியான பலத்தால் காலாந்தரத்தில் நிட்டை கூடப்பெற்று அந்நிட்டையின் மிகுதியால் இறைவன் தெரிசனந் தரப்பெற்று ஆன்மநோக்குடையராகவே யிருந்தனர்.

நமது சுவாமிகளிவ்வாறு வாழுநாளிலோர்நாள் சமாதியினின்றும் விழித்து ஆண்டகுரவனருளை நினைந்து நினைந்து பரவசமாகி அப்பொழுதே உலகத்தில் அருவருப்பு மிகத்தோன்ற ஒட்டுப்பற்றில்லாத துறவுபூண்டனர். இவ்

வாறு துறவுபூண்டு கோவண வுடையோடு திவ்யக்ஷேத்திர
யாத்திரைசெய்து இறுதியில் சுவாமிகள் போளூருக்கெ
ழுந்தருளி அதுமுதற் கொண்டிருபது வருடம் அங்கேயே
இருந்தனர் இருந்தகாலத்து ஓர் நாள் திருசூர் என்னுங்
கிராமத்திற்குச் சென்று பசிப்பிணியை யொழிப்பான்
கருதி ஓர் வீதியினின்றனர் இவரைக் கர்வபுள்ள ஓர் மூடன்
கண்டு இவர் பேசாதிருத்தலை யுணர்ந்து அவமதித்துப்
பேசி சிவக்கக்காய்ந்த ஓர் இரும்புக்கம்பியால் இவர் கன்னத்
தில் சுட்டனன் அத்தருணம் நமது சுவாமிகள், விடோபா!
விடோபா!! என அறற்றினர் அன்றுமுதல் சுவாமிகள் பல
ரால் விடோபா வெனச்சொல்லப்பட்டனர் பின்னர் நமதடி
கள் இது ஆண்டவன் செயலென்றெண்ணி அவ்வூரைவிட்டு
மீண்டும் போளூருக்கெழுந்தளி இனிப் பசியினால் என்றேக
மழிந்தாலும் எங்குஞ் செல்லே னென்று ஸ்ரீ பட்டினத்தடி
கள் விரதங்கொண்டாற்போல விரதங்கொண்டு சந்தை கூடு
மிடத்திலமர்ந்திருந்தனர். சுவாமிகளுக் குற்ற வாய்ப்புண்
ணாறுமுன்னரே சுட்டதுட்டன் தன் குடும்பத்தோடு மழிந்
தான் பின்னர் இப்பெரியாரது மகிமைகளை யுணர்ந்த போ
ளூர்வாசிகள் இப்பெரியாரிருக்கு மிடஞ்சென்று வணங்கித்
துதித்து நமது சுவாமிகளுக்கு வருடந்தோறும் திருவடி
பூசை செய்தும் இப்பெரியாரைக் காணவந்த சிவனடியார்
களை யாதரித்தும் அச்சிவனடியார்க ளிருப்பதற்குரிய திரு
மடாலயங் கட்டுவித்தும் மற்றும் பல திருப்பணிகளைச் செய்
தும் வந்தனர். நமது சுவாமிகள் தம்மையடைந்தவர் நோ
யை யகற்றியும் தம்மைச் சோதித்தற் பொருட்டுப் பலர்
தம்மிடமீந்த பொன்னையும் பொருளையு மண்ணிடையெறிந்
தும் தமக்கு வரும் பிச்சையன்னத்தினைத் தம்மைச் சூழ்ந்
துள்ள சிறுவர்களுக்கும் நாய்களுக்கு முண்ணக்கொடுத்தும்
கடைகளில் இவர் நாமத்தைச் சொல்லி வாங்கிய பொருள
கள் அதிக லாபத்துடன் விலையாகச்செய்தும் பற்பல அரி
ய ஞானவிநோதச் செயல்களைச் செய்துவந்தனர். யோக
சித்தியும் ஞானசித்தியுமுடைய இப்பெருந்தகையார் சென்
ற சாதாரண வருடம் ஐப்பசி மாதம் எட்டாந்தேதி புத

வாரம் திருவாதிரை நட்சத்திரங் கூடிய சுபதினத்தில் சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமைத்தாகிய அந்தமில்லின்ப வடிவ விதேகமுத்தியடைந்தனர் பின்னர் போளூர்ஸ்ரீமான் ந. அப்பாவு செட்டியாரவர்கள் தமக்குரிய நிலத்தில் நமது சுவாமிகளுக்கு ஆலயங்கட்டுவித்துப் பூசித்து வருகின்றனர். நமது சுவாமிகள் இன்றும் ஷை ஆலயத்தின்கண் தோன்றாத் துணைவராயெழுந்தருளி அன்பர்களுக்கு வேண்டிய வேண்டியாங்குதவுந் தன்மையராய் விளங்குகின்றனர். இச்சரித்திரம் யானறிந்த மட்டிலெழுதியதாம்.

முற்றிற்று.

உ

சிவமயம்,

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ விடோபா சுவாமிகள்
சரித்திரம்.

பாயிரம்.

விநாயகர்.

திருவளர் மறையின் முடிமிசையிலகுஞ்
சின்மயப் பொருளினைப் பணிவோர்
கருவடிகளைந்து சிந்தியார் கருதுங்
கருத்தினுக் கூறிழை செய்கை
யொருவனைப் பொருவிலம்பிகை யளித்த
வுன்னருந் தலைவனை விண்ணோர்
கருமுகினிறத்த கசானனத் தவனைக்
கைதொழுஉக் கருதிவாழ்த்திடுவாம்

கந்தர்.

இந்திரன் முதலோர்தம்மை யிடர்புரியவுணற்செற்றுச்
சிந்தையிற் பரிவுபொங்கச் சிவமுனியருளால்வந்த
வெந்தொழிற் குறவர்மாதை விதிமுறைவேட்ட செவ்வேற்
கந்தவே ளடிகளென்றன் கருத்தைவிட்டகன்றிடாவே

கலைமகள்.

எச்சம யத்தினோர்க்கு மிறைவியாய்ப் பங்கயத்தோ
னச்சிய மாதாயென்ற னாவினுமிருந்து வாழுங்
கச்சணி குரும்பையின்சொற் கலைமகள் பாதப்போதை
யுச்சியிலணிவா ரென்றுமுயர்கதி யடைந்து வாழ்வார்.

விடோபா.

பண்டைய மறைகளும் பரமனைப் பகவன்றன்னைக்
கண்டருள் பெற்றுவையங் கைதொழ வைகினாருந்
தொண்டர்தம் பிணியையாற்றித் தூய்மைசால் போஹருற்ற
வெண்டிசை புகழ்விடோபா வினையடிமுடிமேல் வைப்பாம்.

ஆசிரியர்.

பந்தமும் வீடுமற்றைப் பற்பல திறமுமோர்ந்து
சிந்தையிலுணருமாறு சிறவனை யுணர்த்தி யாண்ட
வெந்தையைச் சண்முகப்பே ரிறைவனைக் குரவன்றன்னை
சிந்தையில் புலிசையாரு நிமலனை நினைந்துவாழ்வாம்.

அவையடக்ம்.

பற்றறுத் தமலன்பாதம் பற்றிய விடோபாவென்னு
நற்றவர் சரிதமென்னு நடத்தலாந் தகைத்தன்றேனு
முற்றவெ னுசையாலீ துறைத்தன னதனுற்குற்றங்
கற்றவர் புகலாரென்னைக் கருவியாக் கொள்வான்றே.

பாயிர முற்றிற்று.

தோற்ற முரைத்த சரிதை.

சிவந்தர வெம்மை யாளுஞ் சிவசுத னருளை நாடுந்
தவநெறி முனிவர் வாழுந் தரத்ததாய் வளங்க ணீடி
நவையறு காட்சிற் றூய நானில மாதின் கண்போ
றிவமுறு நகர மொன்று சென்னையென் றுளது மாதோ. (1)

அப்பதி வாழ்வோன் றூய வரசர்தங் குலத்துதித்தோன்
றப்பறு நாகோசிப்பேர் சார்தரு நல்லோனென்று
மொப்பரு பத்திவாய்ந்தோ னெண்கலை யாவுங்கற்றோன்
செப்பரு மேம்பாடுற்றோன் செல்வனங் கொருவனுண்டால். (2)

அன்னவன் மனைவியான வருந்ததி புசிபாயென்பாள்
மன்னிய கருவுற்றெங்கண் மாதவ னருளினாலே
யென்னரு முவப்பப்பற்ப லெழிலுடை மைந்தர்ப்பெற்றாள்
பின்னருமொருத்தி வந்தாள் பெண்ணருங்கலமே போல்வாள் (3)

இல்லறமுடையார்க்கென்று மெழின்மக வின்றேனுளுஞ்
சொல்லறம் பலவுமாற்றித் தூயநீர் தோய்ந்திட்டாலு
மெல்லுமிழ் விண்ணாட்டின்ப மெய்துறு தென்பர்மேலோ
ரெல்லையின் மகப்பெற்றாருக் கென்குறை யீதுநிற்க. (4)

டற்றான் வரத்தான்மீண்டு மொண்டொடி வயிறுவாய்த்துச்
சொற்றநல்லோரை தன்னிற் றெக்குமின் றமார்வாழ்த்தச்
சுற்றவர் புகழுமெங்கள் கண்ணுறு மணிபோல்வானைப்
பெற்றனன் மதியந்தன்னைப் பெருங்கடலீன்ற தென்ன. (5)

மகன்வரு தோற்றங்கண்ட மங்கையு மகிழ்ச்சிகூரத்
தகவுறு தந்தையன்னான் சாற்றரு மழகுநோக்கிப்
புகழுறு மறைநூற்சொன்ன முறைப்படி புரியநின்ற
விகழுறு சடங்குமுற்று மியற்றினனிருந்த பின்னர் (6)

கற்புடை மடவார்மைந்தர் கலைவலோர் பலருஞ்சூழப்
பொற்புடை மைந்தனுக்குப் புகன்றநன் முகூர்த்தத்தன்னி

னற்பெயர் தோதாவென்ன நவின்றனன் வளர்ப்பவன்னான்
சிற்பர னருளானானுந் திகழுற வளர்ந்திட்டானால் (7)

பிறைமதி வளர்ச்சியென்னப் பிறங்கிய தோற்றத்தன்னான்
கறையறு கலைகண்முற்றுங் கற்றிடப் பள்ளியேகி
யிறை நிகராசான்சொற்ற விலக்கண முதலகற்றா
னிறை யெழில்வாலரூப நீங்கிய திவனைவிட்டே (8)

போறி வுடையானாகிப் பெற்றவருவப்பத் தங்கள்
சீர்பெறு குலத்தினுள்ளார் செய்தொழி லாற்றுநாளிற்
பாரிடை யிவனையீன்றாள் பரகதியடையப் பின்னர்த்
தாரணி புகழத்தந்தை தாங்கினனிவனை நன்றாய் (9)

இம்பரி னிவ்வாறன்னா னிருக்கையி லிருக்குநாளி
லம்பியைப் பிணித்தபாச நழுவிடத் தக்ககாலஞ்
சம்புவி னருளினாலே சார்ந்திட வதனானன்கு
வெம்பவக் கொடுமையெல்லாம் விளங்கிய விவனுளத்தே (10)

இன்ன வாமளற்றிற் பட்டோர்க்கிறப்பெலாமுறு மிவற்றா
லின்னலேயன்றி யொன்று மின்பமின்றி தனைநீக்கப்
பன்னருங் குரவனென்று பாரிடை வருவனென்னா
மன்னிய நினைவினோடு மாழ்கின னிறையையுள்ளும் (11)

இன்னணம் பல்காலீச வெழிற்குருதன்னை யுன்னிக்
கன்னலும் புளிக்குமின்சொற் கவிரமனைய வாயெம்
மன்னையோர் பாகத்தெந்தா யடியனேன் முறைக்கிரங்கி
யென்றருள்புரிவை யென்னாயேத் தினனிருக்கு நாளில் (12)

தனைநினை தொண்டருள்ளார் தற்பரசிவனங்கோர் நாள்
நினைவிடைத் தோன்றி மீண்டுபிலத்துற நின்றான்றன்னை
யினைவறக் கண்டபோதே யெழுந்தடி வணங்கிநாயேன்
வினையிரிவகை யெவ்வாறோ விரித்தருள் புரிகவென்றான் (13)

கொண்ட பேரன்புமெய்யிற் குறிகளுமுணர்ந்து நாதன்
றொண்ட நீ விருப்பேதுற்றாய் சொல்லுதி யீதுமின்னே
யுண்ட போகத்தோ முத்தியுயர்விலோ வென்றான்மேலை
யண்டரும் பிறருங்காணா வருமறைமுடிவாய் நின்றான் (14)

புண்ணிய மூர்த்தியின்ன புகறலுங்கண்ணீர் வாரத்
துண்ணென மெய்ந்நடுங்கத் தோன்றலுஞ் சொல்வானிந்த
மண்ணிடைப் பிறவாவண்ணமா மறைமுடிவை யோர்ந்து
கண்ணுதற் பெரும வாழக்கருதினனென்ற போழ்தில் (15)

உண்மையாம் பொருள்விளங்க வுணர்த்தினன் புனிதமூர்த்தி
யண்ணலு மதனையோர்ந் தானடியிணை வணங்கப்பின்னர்ப்
புண்ணியனருட் கணாட்டிப் புனிதனையிருத்தி மேலோர்
கண்ணிய பிரணவத்தாற் காட்டினன் சமாதிதன்னை (16)

அதனையு முணர்ந்தானை யனதற்பினரமலமூர்த்தி
யிதன்வழி யிருத்தியென்னா வேகலும் புனிதனஞ்சி
யிதமுறு மாற்றந்தன்னை யெண்ணிடிற் கனவோவன்றி
மதியுறு நினைவோவென்னா மயங்கினன் சிறிதுகாலம் (17)

பின்னுறத்தெளிந்திதெல்லாம் பிஞ்ஞகனருளாமென்னாத்
தன்னுளே யுன்னியுன்னித்தளர்ந்து நெஞ்சுருகித்தானா
யுன்னரும் பரமமூர்த்தி யுணர்த்திய நெறியினின்றே
பன்னருஞ் சமாதிதன்னிற் பராபரன் வடிவமானான் (18)

அடியனேற் கருளும்வண்ண மருடிரு மேனிசாத்திப்
படிமிசை யன்றுவந்த பரமநீ யென்பால்வைத்த
முடிவிலாக் கருணைக்கொன்று மூடனேனறியேன் கைம்மா
றடியிணை நினைவதல்லாலையனே போற்றியென்றும் (19)

தற்பரன் செயலேயன்றித் தனக்கெனச் செயலொன்றின்றிப்
பொற்புடை வனத்திருப்பான் போலவே சுற்றத்தோடு
சிற்பருஞ் செயலனாகி நின்றனனின்ற நாளிற்
பற்பல மாந்தரன்னான் பகருமாண்பையுன்னி (20)

என்னிவன் செய்கைநம்போ லிருந்தில னிருகண்மூடி
மன்னின னிளமைமிக்கா னென்னினு மடவாராசை
யொன்றிலன் மேனிநோக்கி னுவமையற்றிலகு மின்னா
னுன்னிய தறிந்திலாதே முரைப்பதென்னென்னச் செல்வார் (21)

துறவெய்து சரிதை.

இங்ஙன நிகழுநாளி லொன்றொருழி யிருபாணனுடன்
றங்கேற் பருவத்தையன் றுறவறமுறையினெய்திப்
பங்கமில் றுரியற்கூடிப் பாசகமுறலும் பாச
மங்ககன் றிட்டதாக வனுகபிமான நீத்தான் (22)

பின்னொரு தினத்திலையன் போதிவுடையார் போற்றத்
துன்னுகோ வணத்தனாகித் தொலைவிலாப் பதிகள் சுற்றிப்
பன்னருஞ் சீர்சால் போனூர்ப் பதியினை யெய்தியங்க
ணென்றனை யாள்வான்வேண்டி யிருந்தவ வடிவாய் நின்றான் (23)

பெரியனவ்வூரிற் பண்ணாட்பிறங்கினான் றிரியுங்காலை
யெரிபசிய கற்றவேண்டி யிலவர்சோறிரந்து சென்றீ
தரியதோ ரமுதமென்று மற்பகூ ழென்றும் பாரான்
திரிபுர மெரித்தோனிட்ட திருவெனக் கையேற்றுண்பான். (24)

அங்கண நீரென்றாலு மள்ளியுண் டகங்குளிர்ந்து
பொங்கர வணிந்தோன் சொற்ற பொருளினை யுன்னலன்றி
மங்கலி லமுதென்றாலு மற்றொரு மனையிற்சாரான்
பங்கமில் குணத்தானிந்தப் பரிசினி லிருந்தானிப்பால். (25)

மற்றொரு நாளிலையன் மாநற திருகூர்நண்ணி
யுற்றவெம்பசி தணிப்பானெல்லை யினையியா தஞ்
சொற்றிலன் வீதிநிற்பத் துட்டனங் கொருவன்கண்டு
செற்றமில்குணத்தான்றன்னை வினவலுஞ் செப்பானென்றும் (26)

இகழ்பர ஞானமூர்த்தி யிவனெனத் தெளியானெஞ்சி
னிகழ்வுறு பித்தனென்றே யெண்ணினன் மூடனந்தோ
இகலிலாத் தவமேற்கொண்ட நிமலனை வாயின்கண்ணே
புகழுறு கொடியபாவி புண்படச் சுட்டானென்ப. (27)

ஆவதோர் காலை யையனா றற்றினன் விடோபா வென்னத்
தீவினை தியபோற்ற தேசிகர்க்கன்று தொட்டுப்
பூவுலகதனி லுள்ளோர் புகன்றனர் விடோபாசாமம்
தேவரும் பரவுமற்றைச் சரிதையுஞ் சிறந்ததாமே (28)

சுட்ட புண்ணுறு முன்னர்த் துட்டனு மிறந்தா னென்றே
பட்டனர் வேறோயன்னான் யாழ்படு சுற்றத்தோருஞ்
சிட்டனு மென்னை யாண்ட சிவனருளிது வென்றன்னி
விட்டன னவ்வூர்பின்னர் விளக்கிய போனார்பின்னி (29)

கனிபடு கிள்வியார்தங் கண்வலைப்படாது நாய்
நனிமிகு பசியுற்றாலு நாறுமிவ் வுடலிற்றாலு
மினியொரு வீதி செல்லேனிருப்ப வவ்விடத்தினென்றே
பனிப்பறச் சந்தையுற்றான் பட்டினத்தடிகள் போல (30)

படிமிசை யெவரும்போற்றப் பன்னருந் துறவு பூண்ட
வடிகளைப் போனருள்வா ரனுகினர் பெரியோரென்று
வடிமிசை வீழ்வருற்ற தறைகுவர் திரிவர்பின்னே
கடிமலர் தூவியெங்கள் வினையறுங் கண்பாரென்பர் (31)

என்றவர் வணங்க வொன்றுமிசைத்திலன் மோனியாகித்
தன்னுளே பெருகுமின்ப தன்னையே நோக்கிநோக்கி
என்றுமே யற்றோனாகி யெவ்வுலகத்து மிச்சை
துன்றுதலொழிந்து நின்றான் சுகப்பிரமத்தைப் போல (32)

இப்பெருந் துறவன்மாண்பு மிருக்குமன் னிலையுமோரா
வப்புறு கடற்பாருள்ளா ரணுகினா வணங்கியேத்தி
யொப்பரு கனிகளோடு மூட்டினாரமுதமையன்
செப்பிய முறையினுண்டு செயலறச்சிவமாய் நின்றான் (33)

சொன்னவிப் பரிசேநாளுஞ் சோர்விலாதுற்றகாலத்
தின்னாற் பெரியோனெஞ்ச மியாவதென்றுணர்வான் மாந்தர்
பொன்னையு மற்றுமுள்ள பொருளையு மீவார்வாங்கி
யன்னவர் முன்பேசொன்ன வவைமுழுதெறிவான் மண்ணில் (34)

ஈங்கிவ னிருந்தசெய்கை யிற்சனனிவனை யீன்றோன்
றாங்கரு முவகையோடுந் தனயனைக்கண்டு பண்டு
பூங்கழற் புனிதனின்னைப் பொலிவுறப்பயந்த பேறு
தீங்கறப் பெற்றேனென்னாச் செம்மல்சீர் செற்றுப்போனான் (35)

ஆலமாகவிச்சைவென்ற வறிவினர் தன்மையோரிற்
பாலருன் மத்தரோடு பாசருபசாசரென்ன

நூலுணர் புலவர்சொல்வர் நவலுமத் தன்மையாவுஞ்
சீலமா ரன்னான்மாட்டுத் திகழ்ந்தன வதனாலவ்வூர் (36)

வாய்மைசால் புனிதரியாரும் வள்ளலைக்காலந்தோறுந்
தாயென விரும்பிக்கண்டு தக்கநற்பணிகளாற்றி
மாய்விலாப் பவப்பிணிக்கு மருந்திவனென்று கொண்டு
தூய்மைகொளவன்றனாமந் துதிப்பவரானார் பின்னும் (37)

தேசிகற் கென்றுகொண்ட திருவடி பூசையென்னு
மாசறு தொண்டையோரோ ராண்டினும் வழுவுறாது
பேசிய முறையினோடும் பெருகிய வன்பினோடுங்
கூசிடாதியற்றியன்னான் குரைகழற் பணிந்துவந்தார். (38)

மண்ணிடைப் பிறந்தோரியார்க்கு மாசறு குரவன்பாத
மெண்ணுதலொன்றே யெல்லாவறத்தினு மினிதாமென்றும்
விண்ணுறுமேலாஞ் செல்வவீட்டினை யளிப்பதென்றும்
புண்ணியமேலோர் முன்னர்ப்புகன்றனர் மெய்மையன்றோ. (39)

பின்னுமப் பெரியோன்பாதப் போதினைப் பணிவான்வந்த
நன்மைகொண் மனத்தராகி நவையறு மன்பர் தம்மைச்
சொன்னதோர் முறையினுண்டி துய்ப்பித்தவ் வரியமேலோர்
துன்னியெந்நாளும் வைகத் தூயதோர் மடமுங் கண்டார். (40)

இன்னவா மடத்தின்பாங்க ரிருந்தனனெங்களாத
னன்னதோர் காலைவந்தவ் வருந்தவனடியில் வீழ்ந்து
மன்னினார் தம்மையுற்ற மடிவறு நோய்கண்மீண்டுந்
துன்னிடா வண்ணமுன்னித் தூயநோக்களித்திருந்தான் (41)

ஈதிவணிற்கப்பின்னு மிறைவடிவானானெங்கண்
டேதறச் செய்தலிலை செப்புதற் கியாவர்வல்லா
ரோதிடுமகிமையாக வொழிந்தன விருபதாண்டு
கோதறு குரவனான்றங் குறித்திலாக் குறியினின்றான் (42)

அறுபதென்றாண்டெட் சாதாரணமென வறையுமத்தின்
மருவறு துலாமென்றோது மதியிலா திதியாநாளிற்
சிறுமைதீர் விதேகமுத்தி சீர்பெற வடைந்ததென்றும்
பிரிவறு நிலையனானான் பேசொணாப் பிரமமூர்த்தி (43)

நன்னொரு தலத்திற் போளூர்தங்கு மப்பாவ்சிரேட்டி
யின்னகு கழலான் மேவவிதிமுறை கோயிலாக்கத்
தொன்மையின் மேலோனின்றுஞ் சொல்லுமான் மியங்கனாக்கி
மன்னின னிறைவனாக வென்பதிம் மறுவில்காதை (44)

பகருமப் பெரியோன் மீதப்பதியுளார்க் குற்றவன்பு
நிகரிலாப் பரமன்மீது நின்றிலதென்ன வையன்
செகமுளாருள்ளம் வேட்ட திறமெலா மின்றுமீயுந்
தகவுளானாகி நின்றான் றற்பர மூர்த்தியானோன் (45)

சீர்கெழு முனிவர்காதை சிறப்புறச் சொல்லியத்தாற்
பாரினிற்பல் லோருற்ற பயன்பெறு னின்றாரிந்த
வேரியற் பரமற்குற்ற சரிதையை யெனக்களித்த
சார்கெழு முருகன்பாதந் தாழ்தலென் கடனுமன்றே (46)

ஆதி யெம்பரமன்வாழி யவனருள் வலியாலிந்த
மேதினி மயக்கறுத்து மெய்ப்பொருள் வடிவாய்நின்ற
கோதறு விடோபாவாழி குவலயத்தடியர் வாழி
பூதியோ டைந்தெழுத்தும் பொருவில் கண்டிகையும்வாழி. (47)

ஸ்ரீ விடோபா சுவாமிகள் சரித்திரம்

முற்றிற்று.

[திருநாவுக்கரசு பிரஸ், ஆரணி.]